**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2108/அ1/2025, நாள். .10.2025.**

---

**பொருள் :** தேர்தல் – 2026 – வேலூர் மாவட்டம் – வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆளுகையின் கீழ் செயல்படும் அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு சட்டமன்ற தேர்தல் பணியில் பணிபுரிய தற்போது வழங்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து 08.10.2025 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் தனிநபர் மூலம் அனுப்ப கோருதல் – சார்பு.

-----

வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆளுகையின் கீழ் செயல்படும் அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தேர்வு பணியில் பணிபுரிய தற்போது வழங்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து 08.10.2025 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் கீழ்க்கண்ட விவரங்களுடன் தனிநபர் மூலம் அனுப்பி வைக்க அனைத்து வகை உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அனைத்து வகை உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர் மற்றும் பிற ஆசிரியர்கள் சார்பான விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களிடம் ஒப்படைத்திடுமாறு அனைத்து வகை உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. தற்போது வரப்பெற்றுள்ள படிவத்தை பணியாளரின் புகைப்படம் ஒட்டப்படாமல் விண்ணப்பம் இருப்பின் அவ்விண்ணப்பத்தின் மீது புகைப்படம் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.
2. பணியாளர்கள் மாறுதலில் சென்றுள்ளார்கள் எனில் மாறுதல் ஆணையை இணைத்தும் மற்றும் ஓய்வு பெற்றிருப்பின், ஓய்வு பெற்ற ஆணையினை இணைத்தும் அனுப்பப்பட வேண்டும்.

**// ஒப்பம் //**
**முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),**
**வேலூர்.**

**பெறுநர் :**

அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

**நகல் :**

1. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலருக்கு (இடைநிலைக் கல்வி) தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.
2. வேலூர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது

(பா.க)